### கொரிந்தியர் 2 1:3-4

சர்வேசுரனும் நமது ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதருடைய பிதாவும், இரக்கங்களின் தகப்பனும், சர்வ ஆறுதலின் தெய்வமுமாயிருக்கிறவர் ஸ்துதிக்கப்படுவாராக. (எபே.1:3; 1 இரா. 1:3.) நாங்களே சர்வேசுரனிடத்தில் பெற்றுக்கொள்ளுகிற ஆறுதலைக்கொண்டு எவ்வித இடையூறுகளிலும் அகப்பட்டிருக்கிறவர்களுக்கு நாங்களும் ஆறுதல் வருவிக்கத் திராணியுள்ளவர்களாயிருக்கும்படிக்கு எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் அவரே எங்களைத் தேற்றிவருகிறார்.

### சங்கீதங்கள் 94:19

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 5:4

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்: ஏனெனில் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். (சங். 36:11.) மூ 4. பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்:- சாந்தகுணமுள்ளவர்கள் மோட்சத்தைச் சுதந்தரித்துக்கொள்வதுமன்றி, இவ்வுலகத்திலும் எதிரிகளும் வழக்குகளுமில்லாமல் அமரிக்கையாய் வாழ்வார்களாமே.

### சங்கீதங்கள் 118:5

உம்முடைய நியமங்களை நான் சரியாய்க் கைக்கொள்ளும்படி என் வழிகளை ஒழுங்குபடுத்தியருளும்.

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:18

நான் உங்களை அநாதர்களாய் விட்டுவிடுகிறதில்லை; உங்களிடத்தில் வருவேன்.

### இசாயாஸ் ஆகமம் 51:12

நாம்தாம், நாமே இவ்வகை யாய் உங்களுக்கு ஆறுதல் செய் வோம்; புல்லைப்போல் உலர்ந்து போகும் அநித்திய மனிதனுக்கும், ஒரு மனித குமாரனுக்கும் நீ பயப் படத் தகுமோ?

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 16:7

அப்படியானாலும் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின் றது. ஏனெனில் நான் போகாதிருந்தால், தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில், அவரை உங்களி டத்தில் அனுப்புவேன். (அரு. 14:16, 26.)

உரோமாபுரியார் 1 15:5

பொறுமையையும், ஆறுதலையும் தந்தருளுகிற சர்வேசுரன் சேசுக்கிறீஸ்து நாதருக்கு ஒத்தவண்ணம் நீங்கள் ஒரு வருக்கொருவர் ஏக சிந்தையுள்ளவர்க ளாகும்படி உங்களுக்குக் (கிருபை) செய்வாராக. (1 கொரி. 1:10.)

காட்சியாகமம் 7:16-17

இவர்களுக்கு இனிப் பசியும் இல்லை, தாகமும் இல்லை; வெயிலா வது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. (இசை. 49:10.) ஏனெனில் சிங்காசனத்தின் மத்தி யிலிருக்கிற செம்மறிப்புருவையான வரே இவர்களை மேய்த்து, இவர்களை ஷஜீவஷஜல ஊற்றுகளுக்கு கூட்டிக்கொண்டு போவார். சர்வேசுரன் தாமே இவர்களுடைய கண்களினின்று கண்ணீ ரெல்லாம் துடைப்பார் என்றார். (இசை. 25:8; காட்சி. 21:4.)

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:26

ஆனால் என் நாமத்தினாலே பிதாவானவர் அனுப்பப்போகிற தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் சகலத்தையும் உங்களுக்குப் படிப்பித்து, நான் உங்ளுக்குச் சொன்ன யாவற்றை யும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:16

நானும் பிதாவை மன்றாடுவேன்; அவர் என்றென்றைக்கும் உங்களோடுகூட வசிக்கும்படியாகத் தேற்றுகிறவராகிய வேறொருவரை உங்களுக்குத் தந்தருளுவார். (லூக். 24:49.) மூ 16. தேற்றுகிறவர் இஸ்பிரீத்துசாந்துவானவர்தாமே. தேற்றுகிறவரென்று இஸ்பிரீத்து சாந்துவைப்பற்றி வேதாகமங்களில் அடிக்கடி சொல்லியிருக்கக் காண்கிறோம். இவ் வாக்கியத்தினால் இஸ்பிரீத்துசாந்துவானவர் அப்போஸ்தலர்களோடு மாத்திரமல்ல, அவர்களிடமாய்ச் சத்திய வேதத்தைப் போதிக்க அதிகாரம் பெற்றவர்களோடும் உலகம் முடியுமட்டும் இருப்பாரென்று விளங்குகிறது.

கொரிந்தியர் 2 1:5

அதெப்படியென்றால், கிறீஸ்துநாதருடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல், கிறீஸ்துநாதர்வழியாக எங்களுக்கு ஆறுதலும் பெருகிவருகிறது.

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 15:26

ஆகிலும் பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற வரும், பிதாவினிடத்தினின்று புறப் படுகிறவருமாகிய சத்திய இஸ்பிரீத்துவான தேற்றுகிறவர் வரும்போது, அவர் என்னைப்பற்றிச் சாட்சி சொல்லுவார். (லூக். 24:49; அரு. 14:26.)